பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.12.2022 முதல் 07.12.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 096 (12) PJN/GKMS/2022 தேதி: 02.12.2022

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (27.11.2022 முதல் 01.12.2022 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -07.12.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/11 | 28/11 | 29/11 | 30/11 | 01/12 | | நாள்-1 03/12 | நாள்-2 04/12 | நாள்-3 05/12 | நாள்-4 06/12 | நாள்-5 07/12 |
| 0 | 0 | 0 | 0 | 18.5 | மழை (மி.மீ) | 6 | 16 | 10 | 4 | 16 |
| 33 | 31 | 31 | 31 | 31 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 30 | 29 | 29 | 28 | 28 |
| 25 | 24 | 24 | 21 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25 | 24 | 23 | 23 | 22 |
| 2 | 5 | 4 | 2 | 5 | மேக மூட்டம் | 5 | 8 | 6 | 7 | 8 |
| 63-93 | 71-95 | 64-93 | 63-89 | 71-95 | ஈரப்பதம் (%) | 70-90 | 70-90 | 70-90 | 70-90 | 70-90 |
| 2 | 2 | 2 | 3 | 3 | காற்றின் வேகம் (கி.மீ) | 14 | 14 | 12 | 16 | 14 |
| மேற்கு தென் மேற்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வடக்கு வட கிழக்கு | வடக்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (03.12.2022 முதல் 07.12.2022 வரை):

- டிசம்பர் 03 லிருந்து 07 வரை லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- டிசம்பர் 03 மற்றும் 04 தேதிகளில் இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 22-30 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 12-16 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுறை

| வேளாண் அறிவுறை **பயிர்கள்/ கால்நடைகள்** | **விவரங்கள்/ பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்** | **வேளாண் ஆலோசனைகள்** |
|---|---|---|
| **நெல்** | **ஆனைக்கொம்பன் ஈ** | கடந்த சில வாரங்களில் நிலவிய மேகமூட்டத்துடன் கூடிய தூறல் காரணமாக ஆனைக்கொம்பன் ஈ தாக்குதல் நாற்றங்கால் மற்றும் நடவு வயல்களிலும் காணப்படுகிறது. எனவே பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி ஆனைக்கொம்பன் ஈ பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.<br>நடவிற்கு முன் : நாற்றுக்களின் வேர்களை 0.02% குளோர்பைரிபாஸ் கரைசலில் 12 மணி நேரம் நனைய வைத்து பின் நடவு செய்ய வேண்டும்.<br>இரை விழுங்கியான சிலந்திகள் நெல் வயலில் இருக்குமாயின் ஆனைக்கொம்பன் ஈக்கள் கட்டுப்படுத்தப்படும்.<br>விளக்குப்பொறிகளை வைத்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.<br>நெற் பயிரில் ஆனைக்கொம்பன் ஈயைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) 100 கிராம் அல்லது பைப்ரோனில் (fipronil 5 SC) 1000 -1500 மி.லி அல்லது பைப்ரோனில் (fipronil 0.3 GR) 16.670 - 25 கிலோ இடவும். |
| | **குலை நோய்** | தற்போது நிலவும் வானிலை சூழலானது குலை நோயிற்கு சாதகமாக இருப்பதால் நெருக்கி நடவு செய்வதை தவிர்க்கவும். நோயின் பாதிப்பு தென்பட்டால் லிட்டருக்கு கார்பேன்டாசிம் (Carbendazim 50 WP) 1 கிராம் அல்லது டிரைசைக்ளஸோல் (Trycyclozole 75 WP) 1 கிராம் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தவும். |
| | **களை** | களைகளைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyripac sodium 10 % SC) 200 மி.லி என்ற அளவில் நடவு வயலில், நட்ட 20 நாட்களுக்கு பிறகும் மற்றும் நேரடி விதைப்பில் விதைத்த 25 நாட்களுக்கு பிறகும் களைக்கொல்லியைப் பயன்படுத்தவும். |
| **கால்நடை** | **ஈக்கள்** | இந்த மழை நாட்களில் கால்நடைகளில் ஈக்க ளால் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஈக்கள் சர்ரா மற்றும் ஈ காய்ச்சல் போன்ற நோய்களை பரப்புகின்றன. விலங்குகளுக்கு இரத்த சோகை, கடுமையான அசௌகரியம், கடிக்கும் இடங்களில் ஒவ்வாமை மற்றும் உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க இழப்பை ஏற்படுத்தும். ஈக்களால் ஏற்படும் தொல்லைகளை குறைக்க பின்வரும் முறைகளை நடைமுறைப்படுத்தலாம்.<br>எரு மற்றும் சிறுநீரை கால்நடைத் தொழுவத்தில் இருந்து தூரத்தில் அப்புறப்படுத்துவது வழக்கமாக செய்யப்பட வேண்டும்.<br>குறிப்பாக மாலை நேரங்களில் பச்சை இலைகளை (வேம்பு இலை) கொண்டு கொட்டகையில் மூட்டம் போடலாம்.<br>கடிக்கும் ஈக்களை விரட்ட வேப்ப எண்ணெய் போன்ற இயற்கை விரட்டிகளை முழு உடலையும், குறிப்பாக அடிவயிறு மற்றும் கால்க ளில் தடவ வேண்டும். |

**குறுஞ்செய்தி: டிசம்பர் 03 மற்றும் 06 தேதிகளில் பூச்சிக்கொல்லி தெளிப்பது அல்லது உரம் இடும் பணிகளை மேற்கொள்ளலாம்.**

**முதல்வர்**